(2) கி.சதானந்தம், 10–41, மேட்டுத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

13–வது வார்டு

அமைப்பாளர் : ச.வருதராஜன், 9–72, தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மு.சண்முகராஜ், 7–64, பெருமாள் கோயில் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) சி.செந்தில்குமார், தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

14–வது வார்டு

அமைப்பாளர் : சு.கௌதம், 5–50 (2), புதுக்காடு தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) அ.துரைசாமி, 2–145, கிழக்குத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) ரமேஷ்குமார், 7–39, வண்டிக்காரன் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

15–வது வார்டு

அமைப்பாளர் : மா.சதீஸ்குமார், 14–42, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) அ.மா. பிரவீன், 77–4, பழைய நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) க.ரமேஷ்கண்ணா, 4–7, கிழக்குத் தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாக அமைப்பாளர்கள் :

பாகம் – 157 : மு.மாசிலாமணி, 2/18, முனியப்பன் கோயில் தெரு–2, குருசாமிபாளையம் இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 158 : ப.சங்கர், 3/3, கிழக்குத் தெரு, குருசாமி பாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 159 : அ.விக்னேஷ், 128/14, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 160 : மோ.சரண்குமார், 1, புதூர் குடியிருப்பு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 161 : இ.சதீஸ்குமார், 8/13, குருசாமிபாளையம், பிள்ளாநல்லூர், பேரூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 162 : ப.பூபதி, 11/23, மேட்டுத்தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 163 : க.சரவணன், 60/4, நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், நாமக்கல்.

பாகம் – 164 : கா.இளவரசன், குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 165 : மா.இளங்கோ, 13/48, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பட்டணம் பேரூர்

1–வது வார்டு

அமைப்பாளர் : பெ.துரைக்கண்ணன், 27, சடையன் தோட்டம், போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ப.வியாசன், 40–1, போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ச.நவீன்குமார், 1–26, சடையன் தோட்டம், பட்டணம், இராசிபுரம்.

2–வது வார்டு

அமைப்பாளர் : ர.தேசப்பிரவீன், 33–1, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) கா.சுபாஷ், 6/20, கருப்பண்ணார் கோயில், வண்டிக்காரர் தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) கு.சரவணன், 2–36, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

3–வது வார்டு

அமைப்பாளர் : பிரவீன்குமார், 156–96–ஏ, அம்பேத்கர் நகர், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) க.துர்கேஷ், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) த.ஜெயசூர்யாசிம்மா, 1–3, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

4–வது வார்டு

அமைப்பாளர் : கோ.பாலாஜி, கருப்பண்ணார் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) இரா.கமலேஷ், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) பெ.காந்தமுத்து, 3–3–ஏ, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

5–வது வார்டு

அமைப்பாளர் : செ.பரத், 5–74, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) த.பாலகிருஷ்ணன், 4–2, இந்திரா நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) க.மகிழன், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

6–வது வார்டு

அமைப்பாளர் : இ.சந்துரு, 101, உண்ணாமலைத் தோட்டம், மேட்டாங்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ம.பூபாலன், 6/16, காட்டுக் கொட்டாய், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) சு.மாணிக்கவேல், 82–2, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

7–வது வார்டு

அமைப்பாளர் : பா.கவின் கிஷோர், 15/7, பரமேஸ்வர் நகர், பட்டணம் , இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) பா.பிரபாகரன், 159, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ம.ஸ்ரீநாத், 199–52, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

8–வது வார்டு

அமைப்பாளர் : சு.ஸ்ரீதரன், 58–59, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ஜெ.கௌரிசங்கர், 8–1, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ரா.ஹரிகரன், 26–29, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

9–வது வார்டு

அமைப்பாளர் : சே.மணிகண்டன், 60, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) செ.கபிலேஸ்வரன், 8–34, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தாமரைச்செல்வன், 12–ஏ, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

10–வது வார்டு

அமைப்பாளர் : சு.பிரபாகரன், 99–10, ஏரி வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) ரா.பூபாலன், 106, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தரணி, 59–ஏ, ஏரிவயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

11–வது வார்டு

அமைப்பாளர் : சி.விக்னேஷ்குமார், 13–1, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) அ.பழனிவேல், 51–ஏ, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

12–வது வார்டு

அமைப்பாளர் : பா.பேரரசன், 130, பள்ளிக் கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) த.விக்னேஷ், 87, பள்ளி வீதி, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ச.நவீன்குமார், 331, பள்ளிக்கூடத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

13–வது வார்டு

அமைப்பாளர் : ப.ஜெகன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) வெ.ரோசன் குமார், 58–1, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.அஸ்வின், 109, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

14–வது வார்டு

அமைப்பாளர் : ர.மாணிக்கம், 103–118, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) பூ.கார்த்திக், 91–1, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ரா.பிரபு, 101, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

15–வது வார்டு

அமைப்பாளர் : பா.இனியவேல், 104, ஏரிக்காடு, ஆலத்தூர் ஏரி, வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் : (1) மா.காவியன், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) மா.விக்னேஷ், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாக அமைப்பாளர்கள் :

பாகம் – 81 : பா.வசந்தராஜ், 1/2,போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 82 : மா.கார்த்தி, 10/11, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 83 : சு.கிருஷ்ணமூர்த்தி, 157, பள்ளிக்கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 84 : க.சுஜித்குமார், 76,கணபதி தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 85 : பா.விஷால், 15/7, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 86 : ரா.மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 87 : பா.ஜெகன்பாண்டியன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 18–10–2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

எத்தனை சக்திகள் ஒன்று கூடி வந்தாலும் – வெற்றி நடைபோடும்

முதல்வரை தொட்டுக் கூடப் பார்க்க முடியாது!

சட்டப்பேரவையில் டி.கே.ஜி. நீலமேகம் பேச்சு!

சென்னை, அக்.19-

சட்டப்பேரவையில், துணை நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய தஞ்சை தொகுதி கழக உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், "எந்தச் சக்திகள் ஒன்று கூடி வந்தாலும், வெற்றி நடைபோடும் முதல்வரை தொட்டுக் கூடப்பார்க்க முடியாது!" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் டி.கே.ஜி. நீலமேகம் பேசியதாவது: -

தமிழகத்தில் திராவிடம் தழைத்தோங்க, சமூக நீதி காத்திட பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

தொலைநோக்குப் பார்வை, கூரிய சிந்தனை, சரியான திட்டமிடல், கடினமான உழைப்பு இதன்மூலமாக பல வெற்றிச் சரித்திரங்களை படைத்து, இந்திய துணை கண்டமே திரும்பிப் பார்க்கின்ற வகையில், உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பெருங்குடி மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கின்ற வகையில், ஏற்றமிகு தமிழகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர், பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களை வணங்குகிறேன். திராவிட மாடல் அரசின் அமைச்சரவையில் தனக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பொறுப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு துணை நின்று, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்தை நேர்த்தியான முறையிலே மேற்கொண்டு, தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி வலிமை மிகுந்த இளைய சமுதாயத்தை உருவாக்கி வருகின்ற இளைய சமுதாயத்தின் எழுச்சிமிக்க தலைவர், எங்கள் இளம் தலைவர் துணை முதல்வர் அவர்களை வணங்குகிறேன். நகராட்சித் துறை அமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், தொழில் துறை அமைச்சர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

நடுநிலையோடு பேரவையை நடத்துகின்ற பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், அரசுக் கொறடா அவர்களையும் வணங்குகிறேன்.

ஓர் அரசு எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் தலைவர் தளபதியார் தலைமையில் நடைபெறுகின்ற இந்த அரசு. இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்கின்ற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை பார்த்து பிரம்மிக்கின்ற வகையிலே ஒவ்வொரு திட்டங்களும் இன்றைக்கு செயல்பட்டு வருகின்றது.

முதல்வருக்கு தெலுங்கானா முதல்வர் வாழ்த்து!

அண்மையிலே நடைபெற்ற கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்கின்ற சிறப்பான ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட தெலங்கானா மாநிலத்தினுடைய முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள், நிகழ்ச்சியை கண்டுகளித்து இறுதியிலே உரையாற்றுகிறபோது தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருக்கின்ற திட்டங்களை எல்லாம் பார்த்து, தன்னுடைய மாநிலத்திற்கும் அதை அமல்படுத்துவேன் என்று தெரிவித்து, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார்.

அதேபோல், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதல்வர் பகவந்த் மான் அவர்கள் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தந்து, தொடங்கி வைத்து, இந்த திட்டத்தினுடைய சிறப்புகளை தெரிந்துகொண்டு, இந்தத் திட்டத்தை பஞ்சாப் மாநிலத்திலும் அமல்படுத்துவேன் என்று தெரிவித்து, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும், பாராட்டுகளும் தெரிவித்தார்கள். இவைகளெல்லாம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசைக் கொண்டு செல்கின்ற சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு. குறிப்பாக இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய மகளிர் உரிமைத் தொகை திட்டம். இந்தத் திட்டம் இன்றைக்கு மிகுந்த சிறப்போடு மகளிரிடத்திலே வரவேற்பை பெற்று தலைவரை வாழ்த்திக்

கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தை ஆய்வு செய்கின்றபோது, இந்தத் திட்டம் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரிடத்தில் சென்றடைந்ததையும், இந்தத் தொகை பெரும்பாலும் மருத்துவ செலவிற்காகவும், குழந்தைகளின் கல்வி பயன்பாட்டிற்காகவும் பயன்படுகின்றன என்று இன்றைய ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இதுதான் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வைத்த முன்னெடுப்புகளுக்கு கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய வெற்றியாகும்.

'நான் முதல்வன்' திட்டத்தைப் பொறுத்தவரையில், மாணவர்கள் மத்தியிலேயே தொழில்சார்ந்த திறன் கற்பித்தல், வேலைவாய்ப்பைப் பெற்றிடுதல்மூலம், இன்றைக்கு இளைஞர் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இதையும் ஆய்வுசெய்கின்றபோது, 75 சதவிகிதத்திற்கு அதிகமான மாணவர்கள் தொழில்சார்ந்த திறன் பெற்று வேலைவாய்ப்பு பெறுகிறார்கள் என்றும், இந்தத் திட்டத்தால் குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கும், நகர்ப்புற மாணவர்களுக்கும் சமமான வேலைவாய்ப்பு கிடைக்கின்ற உன்னதமான திட்டமாக வரவேற்பு பெற்றுள்ளது என்றும் தெரிகிறது. எனவே, தமிழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நம்முடைய தமிழ்நாடு முதல்வர் அவர்களை மனதார பாராட்டி, வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், இன்று உலகம் போற்றும் துறையாக, பல்வேறு திட்டங்களில், விளையாட்டுப் போட்டிகளில் வீரர்களை ஊக்கப்படுத்துகின்றவகையில் அமைந்திருக்கின்றது. இதனை தமிழ்நாட்டு அரசின் துணை முதல்வர் அவர்கள் சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள், கலைஞர் விளையாட்டு கிட், வீரர்களுக்கு உரிய ஊக்கத் தொகை, 3 சதவிகித இட ஒதுக்கீடு போன்ற திட்டங்களால் இன்றைக்கு விளையாட்டுத் துறை முதன்மை வாய்ந்த துறையாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. குறிப்பாக, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கியபோது, 6 இலட்சம் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு, அது இன்றைக்கு 11 இலட்சம் வீரர்கள் கலந்து கொள்ளும் வகையில் வளர்ந்து, மேலும் 16 இலட்சம் வீரர்கள் கலந்துகொள்ளும் அளவிற்கு மிகப் பிரம்மாண்டமான துறையாக வளர்ந்து, பரிசுத் தொகை மாத்திரம் ஏறக்குறைய 37 கோடி ரூபாய் என்கிற நிலையில் தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறை, இன்றைக்கு உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. நான் நன்றியுடன் ஒன்றை இந்த அவையில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சையிலுள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் சர்வதேச அளவிலான செயற்கை இழையோடுதளம் பணிகள் தொடங்கி, பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்தன. கடந்த கூட்டத் தொடரில் இதுகுறித்து துணை முதலமைச்சர் அவர்களிடம் அதனை மேன்மைப்படுத்திப் பணிகளை முடித்துத் தர வேண்டுமென நான் கேட்டுக்கொண்டேன். உடனடியாக, தன்னுடைய பதிலுரையில் அந்தப் பணிகளை ஒரு மாதத்திற்குள் முடித்துத் தருகிறேன் என்று இந்த அவையில் நம்முடைய துணை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஏறக்குறைய ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் ஒரு மாதத்திலேயே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பணியை முடித்துக் கொடுத்து, அவர்களுடைய திருக்கரங்களினாலேயே கடந்த மே மாதம் அதைத் தொடங்கிவைத்து சிறப்பித்திருக்கிறார்கள்.

தஞ்சையைச் சுற்றி யிருக்கின்ற ஏறத்தாழ 7, 8 மாவட்டங்கள் பயன்படக்கூடிய வகையில் மிகச் சிறப்பாக அந்த மைதானம் இன்றைக்கு பயன்பாட்டில் இருந்து சிறப்பித்து வருகிறது. இந்த ஆண்டு மாநில அளவிலான முதல்வர் கோப்பைக்கான பள்ளி மாணவ மாணவியர்களுக்கான கால்பந்துப் போட்டி நடைபெறக்கூடிய சிறப்பான ஒரு வாய்ப்பை அந்த மைதானம் பெற்றது. அதற்குக் காரணம், துணை முதல்வருடைய துரிதமான முன்னெடுப்பே என்பதை நான் பெருமையோடும், நன்றியோடும் இந்த நேரத்தில் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றவகையில், தெரு விளக்கு வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சுகாதாரம், சாலை வசதி என அனைத்து வசதிகளும் நம்முடைய அரசால் மிகச் சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியான தஞ்சை மாவட்டத்தில், 51 மாநகராட்சி வார்டுகளும், 1 பேரூராட்சியும், 6 ஊராட்சிப் பகுதிகளும் இருக்கின்றன. குறிப்பாக, 2021-2022 முதல் 2024-2025 வரையில் என் தொகுதிக்குட்பட்ட 315 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 2025-2026 ஆம் ஆண்டிற்கான 306 சாலைப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அதில் 75 சதிவிகிதம் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 332 சாலைப் பணிகள், அதாவது 33.21 கி.மீ. தூரம் சாலைகள் அமைக்க புதிய கருத்துரு தயாரிக்கப்பட்டு, அது இன்றைக்கு ரூ.15.75 கோடி செலவில் நடைமுறைப்படுத்தவிருக்கிறது என்பதனை, இந்த அரசு அடிப்படை வசதிகளை எந்த அளவில் செயல்படுத்திவருகிறது என்பதற்கான உதாரணமாக பதிய வைக்க விரும்புகிறேன்.

உயர் கல்வி துறையைப் பொறுத்தவரையில், அகில இந்திய உயர் கல்வி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் 49 விழுக்காடு பெற்று இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்று இது அகில இந்திய சராசரி விகிதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம்பெற்று சிறப்பித்துள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

இந்தியாவிலேயே அதிக அளவிலான அரசு பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது நமது தமிழ்நாடு. அதேபோன்று, 500க்கும் மேற்பட்ட தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரிகளை கொண்டுள்ளது நம் தமிழ்நாடு. அதிக அளவிலான மருத்துவக் கல்லூரிகளை கொண்டுள்ளது நம் தமிழ்நாடு. இந்தியாவில் புகழ் பெற்ற 100 உயர் கல்வி நிறுவனங்களில் 31 உயர் கல்வி நிறுவனங்கள் நம் தமிழ்நாட்டில் உள்ளது என்கின்ற பெருமையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களையேச் சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முதலமைச்சர் அவர்களின் முத்தாய்ப்பான திட்டங்களில் ஒன்றான புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டத்தின் வாயிலாக கல்லூரியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 34 சதவிகிதம் அதிகரித்துள்ளதால் மாணவர்களும், பெற்றோர்களும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, காலை உணவுத் திட்டம், பள்ளி கல்வித் துறையில் தமிழகம் முழுவதும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிற திட்டமாகவும், குழந்தைகள் காலை நேரத்தில் வயிறு நிறைய உண்டு விட்டு கல்வி கற்கின்ற ஒரு நல்ல நிலையும், அதன் மூலமாக நல்ல சமுதாயத்தை, தமிழ் சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கக் கூடிய நல்ல நிலையும் இன்றைக்கு தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிறது என்றால், (மணியடிக்கப்பெற்றது) பாட்டாளி மக்கள், ஏழை மக்களெல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டு முதல்வர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் துறையில் மிகப் பெரிய வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது. அண்மையிலேயே ஜெர்மன் நாட்டிற்குச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் TN Rising Germany Investors Conclaveல் கலந்து கொண்டு 26 நிறுவனங்களுடன் 15,320 நபர்கள் பயன் பெறுகின்ற வகையில் ரூ.7,200 கோடி அளவிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடுதான் இந்தியாவின் ஜெர்மன் என்று நம்முடைய தமிழ்நாட்டு முதல்வர் அவர்களால் பெருமையோடு சொல்லக்கூடிய வகையில் இந்தத் துறை வீறு நடை போடுகிறது. (மணியடிக்கப்பெற்றது)

முதல்வர் தாயாகவும் தந்தையாகவும் திகழ்கிறார்!

இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானம் கொண்ட நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தாயுமானவர் திட்டத்தை உருவாக்கி ஆதரவற்ற குழந்தைகளுக்கு தாயாராகவும், தந்தையாகவும் இருக்கின்றார்.

அதேபோன்று, 30க்கும் மேற்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து உடனடியாக தீர்வுகாணகூடிய வகையில், பல துறைகளை ஒன்றிணைத்து உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறது. அதன் மூலமாக பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத கோரிக்கைகள் சில மணி நேரங்களில் அல்லது சில வாரங்களில் அல்லது சில நாட்களில் நிறைவேற்றக்கூடிய முதல்வர் அவர்களை இதன்மூலம் பயன்பெற்றவர்களெல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

முதல்வர் தளபதியார் அவர்கள் கடந்த ஜூலை மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அது தமிழகத்திலுள்ள அனைவருக்கும் தெரியும். அவர் மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளை தொடர்ந்தார். குறிப்பாக, உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் திட்டம் எப்படி நடைபெறுகிறது, எத்தனை மனுக்கள் வரப்பெற்றன, எத்தனை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கின்றன, அந்தப் பணிகள் தொய்வின்றி நடைபெறுகிறதா என்று மருத்துவ மனையிலிருந்து கேட்ட வரலாறு, ஒரு தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்றால், அது நம்முடைய தன்னிகரில்லா தலைவர்தான். அந்த முயற்சியை வெகுவாக இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது)

வாக்களித்த மக்களும், வாக்களிக்காதவர்களும் ஏற்றுக்கொள்கின்ற வகையில், தமிழ்நாட்டு மக்களை தலைகுனிய விடமாட்டேன் என்று சூளுரைத்து கழக அரசு வெற்றிநடை போடுகிறது. வெற்றிநடை போடுகின்ற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை எந்த சக்திகள் ஒன்று கூடினாலும், புதியதாக எவர் வரினும், தொட்டுக் கூட பார்க்க முடியாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். களம் நமதே! வெற்றி நமதே! நன்றி.

இவ்வாறு அவர் பேசினார்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு யாருடன் போராடும் என்ற ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில் துண்டறிக்கையை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கோணையில் உள்ள பொதுமக்களிடம் வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நிர்வாகிகள் அய்யாதுரை, வாசு, ஆறுமுகம், ரவி, இக்பால்,செல்வமணி ஆகியோர் உள்ளனர்.